இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை - **2018/2019**
**ESP2319/ STP9619** – கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்
காலம்: 03 மணித்தியாலங்கள்

நேரம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 24.03.2019

எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்குக

01. (i) "வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகூறல்" ஆகிய இரண்டு எண்ணக்கருக்களினதும் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை விபரிக்குக? (09 புள்ளிகள்)

(ii) ஆலோசனை கூறுபவர் கொண்டிருக்க வேண்டிய வாண்மைசார் பொறுப்புக்கள் மூன்றை (03) விளக்குக? (12 புள்ளிகள்)

(iii) முன்னர் வாழ்ந்த நபர்களை விடவும் தற்கால சமூகத்தில் வாழும் நபர்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகூறல் சேவையானது மிக தேவையான உள்ளது. இக்கூற்றை மூன்று உதாரணங்கள் தந்து நியாயப்படுத்துக? (12 புள்ளிகள்)

02. (i) வினைத்திறனான தொழில்சார் ஆலோசனைகூறல் ஒன்றிற்கு அவசியமான தனியாள் மற்றும் குழுஆலோசனைகூறல் திறன்கள் மூன்றை (03) விளக்குக? (09 புள்ளிகள்)

(ii) தொழில்சார் விருத்தி செயன்முறை என்றால் என்ன? விளக்குக. ( 08 புள்ளிகள்)

(iii) தம்மிடம் வருபவரது தொழில்சார் இலக்குகளுக்கு உதவுவதற்காக ஆலோசனை கூறுபவர் பின்பற்றக்கூடிய நான்கு(04) நடவடிக்கைகளை விபரிக்குக? (16 புள்ளிகள்)

03. (i) ஆலோசனை கூறுபவர் ஒருவருக்குரிய ஆலோசனை கூறல் நுட்பங்களின் முக்கியத்துவத்தை விளக்குக? (06 புள்ளிகள்)

(ii) அனேகமான நுட்பங்கள் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவைவயாகும்.

அ. யாதாயினும் ஆலோசனை கூறல் கோட்பாடு ஒன்றைத் தெரிவுசெய்து அதன் அடிப்படை தத்துவங்களை விளக்குக? (10 புள்ளிகள்)

ஆ. ஆலோசனை கூறலில் பிரயோகிக்கக்கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை கூறல் கோட்பாட்டைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களினது/ நோக்கங்களினது வகைகளைக் குறிப்பிடுக? (07 புள்ளிகள்)

இ. தெரிவுசெய்யப்பட்ட கோட்பாடுகளின் வரையறைகள் இரண்டை(02) விளக்குக? (10 புள்ளிகள்)

04. (i) ஆலோசனை கூறுபவரின் நான்கு (04) பண்புகளை விபரிக்குக? (08 புள்ளிகள்)

(ii) பாடசாலை சூழலில் மாணவர்களை மன அழுத்தத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய நான்கு (04) நிலைமைகளை உதாரணங்களுடன் விளக்குக? (17 புள்ளிகள்)

(iii) மேற்கண்ட மன அழுத்தத்திற்கு இட்டுச் செல்லும் நிலைமைகளைக் குறைப்பதற்கு ஆலோசனை கூறுபவரால் எடுக்ககூடிய நடவடிக்கைகள் நான்கினை (04) ஆராய்க? (08 புள்ளிகள்)

05. (i) விசேட கல்வித்தேவைகள் எனும் எண்ணக்கருவை விளக்குக? (09 புள்ளிகள்)

(ii) விசேட தேவைகளுடனான மாணவர்களாகக் கருதக்கூடிய நான்கு (04) வகையான மாணவர்களைப் பெயரிடுக? (12 புள்ளிகள்)

(iii) மேலே கூறிய மாணவர் வகையில் இருந்து ஒன்றைத் தெரிவு அம்மாணவர்களுக்காக ஆலாசனை கூறுபவரால் பின்பற்றக்கூடிய நான்கு (04) உத்திகளை விளக்குக?

(12 புள்ளிகள்)

06. (i) வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகூறல் மீதான சேவைப்பரப்புக்கள் மூன்றை (03) உதாரணங்களுடன் விளக்குக? (09 புள்ளிகள்)

(ii) ஆலோசனைகூறுபவர் என்ற வகையில் பின்வரும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழக/ உயர்கல்வி நிறுவனமொன்றில் உள்ள ஆசிரியரின் வகிபங்கினை விளக்குக?

அ. நிறுவனத்தில் உள்ள முறைமைகளின் வினைதிறனான மேம்படுத்தல் (08 புள்ளிகள்)

ஆ. பல்கலைக்கழகங்களில்/ உயர்கல்வி நிறுவனங்களில் எதிர்சமூக செயற்பாடுகளைக் குறைத்தல் (08 புள்ளிகள்)

இ. மாணவர்களின் தொழில்சார் தேவைகளை அடைவதற்கு உதவுதல். (08 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது